Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr. PC.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.VI COURT, COIMBATORE

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions
} Case No. CC 132/2011

Depositions of LW 6 Witness for PW 2 } Prosecution Witness

Name :திரு. செந்தில்குமார்
Father's Name :திரு.ஜித்தன்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969(Central Act 44 of 1969) on the 13.02.2020

முதல் விசாரணை

நான் தற்சமயம் வடவள்ளியில் குடியிருந்து ரயில்வே கான்ரக்டர் வேலை செய்து வருகிறேன். ஆஜர் 1 வது எதிரியை தெரியும். 2 வது எதிரியை தெரியாது. 2008 வருடத்தில் ஆஜர் எதிரி சுரேஷ்குமார் என்னிடம் வாடகைக்கு கட்டிடங்கள், கடைகள் ஏதாவது உள்ளதா என்று கேட்டு வந்தார். எதிரி என்னிடம் வாடகைக்கு கேட்ட போது மாணிக்கம் என்ற புரோக்கர் மூலமாக வந்தார். எனக்கு சொந்தமான கல்வீரம்பாளையத்தில் உள்ள கதவு எண்.288 என்ற கடையை எதிரிக்கு மாதம் ஆயீரம் ரூபாய் வாடகைக்கு கொடுப்பதாக முடிவு செய்து எதிரிக்கு அந்த கட் டிடத்தை வாடகைக்கு கொடுத்தேன். அந்த கடைக்கு முன்தொகையாக

ரூ.12000/- கொடுப்பதாக கூறினார். அந்த கடையில் பைனான்சு கம்பெனி வைத்து நடத்த போவதாக சுரேஷ்குமார் என்னிடம் கூறினார். ஒரு வாரத்தில் அட்வான்சு முன்தொகை கொடுத்துவிடுவதாக கூறினார். ஆனால் தரவில்லை. ஒரு மாதம் நான் வாடகைக்கு கொடுத்த கடைக்கு எதிரி சு ரே ஷ்குமார் முதலில் அவருடன் 10 நபர்கள் வந்தார்கள். அதன் பிறகு அவர் கடைக்கு வந்தாரா என்று நான் கவனிக்கவில்லை. ஒரு மாதம் முடிந்தவுடன் வாடகை மற்றும் முன்தொகையை நான் கேட்டு போன் செய்தேன். ஆனால் அவர் எடுக்கவில்லை. புரோக்கர் மாணிக்கத்திடம் சுரேஷ்குமார் முன்தொகை, வாடகை தரவில்லை என்று சொன்னேன். அதற்கு புரோக்கர் பதில் சரியாக சொல்லவில்லை. சுரேஷ்குமாரும் அதன் பிறகு கடைக்கு வரவில்லை. அதன் பின்பு புரோக்கர் மாணிக்கத்திடம் கூறி எதிரி சுரேஷ்குமாரின் பொருட்களை கடையில் இருந்து எடுத்து செல்லும்படி கூறினேன். அவரும் பொருட்களை எடுத்துக் கொண்டு சென்றார். எதிரியை கடையில் வாடகைக்கு வைத்த போது ஒப்பந்தம் ஏற்படுத்தி கொள்ளலாம் என்று கூறினேன். அதற்கு எதிரி முன்தொகை கொடுக்கும் போது ஒப்பந்தம் செய்து கொள்ளலாம் என்று கூறினார். முன்தொகை கொடுக்காததால் ஒப்பந்தமும் செய்து கொள்ளவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக டிசிபி போலிசார் என்னை விசாரித்தனர்.

1வது எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில்லை. குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Sd/-செந்தில்குமார்